DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 06/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | ஜெயப்பிரியா | Age | : | 40 |
| H/N | : | செல்வக்குமார் | Occupation | : | தலைமைக்காவலர் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 10th day of June 2024.

**10.06.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 15.10.2019–ம் தேதி நான் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு துறையில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திருமதி. சசிக்கலா, தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன், முதல்நிலைக்காவலர் திரு. சதீஷ்குமார் ஆகியோர்களுடன் ரோந்து செல்லும் போது இராமநாதபுரம் வசந்தம் நகர் பேருந்து நிறுத்தம் அருகே 4 மூட்டை பாலுத்தீன் சாக்குடன் ஒரு பெண் அமர்ந்திருந்தார். சார்பு ஆய்வாளர் அவர்களை விசாரித்த போது பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் புழுங்கல் அரிசியை அவர் வைத்திருந்தார்.

**2.** பின்னர் எதிரி தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் என்பவரும் கையெழுத்து செய்தோம். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விசாரணையின் போது தனது பெயர் மாலா என்று கூறினார். பின்னர் அவரது வீட்டை சோதனை செய்தபோது பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் வீட்டிலிருந்து 21 மூட்டை ரேசன் அரிசியையும், 4 மூட்டை ரேசன் அரிசியையும் அத்தாட்சி மூலம் சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் என்பவரும் கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நானும், சார்பு ஆய்வாளரும் என்னென்ன பணி செய்தோம் என்பதை பற்றிய விவரம் பொதுநாட்குறிப்பிலும், பாக்கெட் டைரியிலும் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை நான் ஆய்வாளரின் விசாரணையின் போது சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். வசந்தம் நகர் சாலை என்பது கிழ மேல் பிரதான சாலை என்றால் தற்போது ஞாபகம் இல்லை ரோட்டின் இருபுறமும் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். எந்த பேருந்து நிறுத்தத்திற்கு அருகே எதிரி நின்றுகொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

2. ஆஜர் எதிரி எந்த நிற பாலித்தீன் பை வைத்திருந்தார் என்பதை பற்றியும், எந்த நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பாலித்தீன் பை வைத்திருந்தார் என்பது பற்றியும் நான் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட அரிசிகளை கருவிகளை கொண்டு எடைபோட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். அரிசிகளில் பல வகையான அரிசிகள் உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றதாக சொல்லப்படும் அரிசி எந்த வகையான அரிசி என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் சார்பு ஆய்வாளர், தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் நான் ஆகிய மூவரும் தான் ரோந்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரியிடம் பணம், தராசு மற்றும் மற்ற பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி யாரிடமிருந்து அரிசியை வாங்கினார் என்பதை பற்றி சார்பு ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் ஆஜர் எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை விசாரணை என்ற பெயரில் காவல்நிலையத்திற்கு வரவழைத்து அதிகாரத்தை பயன்படுத்தி ஆவணங்களில் கையொப்பம் பெற்று சட்டவிரோதமாக நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 06/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | சதீஷ்குமார் | Age | : | 40 |
| F/N | : | நாகராஜ் | Occupation | : | முதல்நிலைக்காவலர் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 10th day of June 2024.

**10.06.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கீழசெல்வனூர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 15.10.2019–ம் தேதி காலை 10.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் சசிக்கலா, தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன், பெண் தலைமைக்காவலர் ஜெயப்பிரியா ஆகியோருடன் நான் குடிமைப்பொருள் கடத்தல் மற்றும் பதுக்கல் சம்மந்தமாக இராமநாதபுரம் வசந்தம் நகர் பஸ் ஸ்டாப்பில் ரோந்தில் இருந்த போது ஆஜர் எதிரி 4 பாலித்தீன் பையில் ரேசன் அரிசி வைத்திருந்தார்கள். அவரை விசாரணை செய்த போது மேற்படி ரேசன் அரிசிக்கு உண்டான ஆவணத்தை அவர் சமர்ப்பிக்கவில்லை. அதன்பிறகு ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அங்கு தலா 50 கிலோ எடை கொண்ட 21 சிப்பம் ரேசன் அரிசி இருந்தது. ஆஜர் எதிரி மேற்படி அரிசியை மாவாய் அரைத்து விற்பதாக கூறினார். சார்பு ஆய்வாளர் ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்து பின்னர் ரேசன் அரிசியை இராமநாதபுரம் குடோனில் ஒப்படைத்தோம். பின்னர் நிலையம் வந்து ஆஜர் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன விவரத்தையே தான் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நானும், சார்பு ஆய்வாளரும் என்னென்ன பணி செய்தோம் என்பதை பற்றிய விவரம் பொதுநாட்குறிப்பிலும், பாக்கெட் டைரியிலும் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை நான் ஆய்வாளரின் விசாரணையின் போது சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். வசந்தம் நகர் பஸ் ஸ்டாப் இருக்கும் சாலை மக்கள் அதிகமாக நடமாடும் பகுதி என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று வாகன போக்குவரத்தும் மக்கள்

நடமாட்டமும் இருந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீடு எந்த திசையை நோக்கி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை பற்றி என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சார்பு ஆய்வாளருடன் எவ்விதமான ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் வழக்கின் தன்மைக்கேற்ப பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியிடமிருந்து எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**